# மணமகள் பெற்றோர் கவனத்திற்கு

இனி மணமகள் பெற்றோருக்கு அவர் சார்ந்தவர்களுக்குத் தேவையான பல விஷயங்களை இந்த அத்தியாயத்தில் பார்ப்போம். ஒரு வீட்டில் பெண்ணைப் பெற்று பேணிக்காத்து பருவம் அடைந்தவுடன் அந்தப் பெண்ணுக்கு ஏற்றவாறு மாப்பிள்ளை பார்த்துத் திருமணம் முடித்து வைப்பது பெற்றோர் அல்லது பாதுகாவலர் கடமையாகும். அந்தக் கடமையை நிறைவேற்றுவது எளிதான செயல் அல்ல. அப்படிப்பட்ட செயலைச் செய்து முடிக்க ஒரு தெளிவான முடிவை மேற்கொள்வதற்கு உரிய அனுபவ அறிவு தேவை உங்கள் மகளின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொள்ளும் தன்மையும் வேண்டும்.

மணமகன் வீட்டார்கள் பெண் பார்த்தபின் உங்கள் பெண்ணின் கருத்தைக் கேட்டு முடிவு செய்வது மிகவும் அவசியம். முதலில் உங்கள் மகளின் குணங்கள். செயல்கள் அனைத்தையும் நன்கு அறிந்திருப்பீர்கள். அப்படி அறிந்த நீங்கள் எதிர்காலத்தில் இந்தப் பெண்ணுக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை அமைந்தால் வாழ்க்கை இடாப் பாடில்லாமல் கொண்டு செல்ல முடியும் என்ற கருத்தைக் மனதில் கொண்டு அவ்வாறான வரனை அமைத்துக் கொடுப்பது அவசியம். இதேபோல் உங்கள் பெண்ணிடம் உடல் குறை ஏதேனும் உள்ளதா என கண்டறிந்து. இருப்பின் அவற்றை தக்க மருத்துவரைக் கொண்டு உடல் நலத்தினைக்காப்பது நல்லது. குறிப்பாக இல்லற வாழ்வில் ஈடுபடும் போதுதான் பெரும்பாலான குறைகள் பாதிக்கும்.அதுவரை பெரும்பாலான குறைகள் பாதிப்பைத் தராது. ஆகவே நீங்கள் மருத்துவரை அணுகும்போது உடல்நிலையினை நன்கு விளக்கி பரிசோதனை செய்துகொண்டு உங்கள் மகளின் உடலில் எந்தவகையான பாதிப்புகள் இருக்கிறதென்பதை அறிந்து செயல்படுவது நல்லது. அந்தக் குறைபாடானது உடல் உறவின்போதோ அல்லது கர்ப்ப காலத்தின் போதோ, பிரசவ காலத்தின்போதோ பாதிக்கும் என்றாலும் அதையும் நிவர்த்தி செய்து திருமணம் செய்வித்தல் மிகவும் நன்று. இவ்வாறு நோய் தீர்த்து திருமணம் செய்வதென்பது அவர்களின் இல்வாழ்க்கைக்கு மிகவும் நல்லது.உங்கள் மகளின் உடல் நல்ல நிலையில் இருந்தால்தான் பிறக்கும் குழந்தையும் உடல் வலிமையுடனும்-அறிவுடனும் பிறக்கும்

இவர் எதைப் பார்த்தாலும் எதைக் கூறினாலும் குறைகளையே கூறுகிறார் என்று எண்ணுபவர்கள் அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பயம் என்பது போல் கூறுகிறார், என்று எண்ணா வேனடாம் உங்கள் மகளின் உடலில் உள்ள குறைகளையெல்லாம் கூறி நிவர்த்தி செய்யாமல் திருமணம் செய்ய வேண்டாம் என்று கூறுவதற்கேயாகும்.

இந்த இடத்தில் ஒரு கருத்துக் கூறலாம். என்னவென்றால், நிறைகளை அடுத்தவர்களிடம் சொல் குறைகளை உரியவர்களிடம் மட்டுமே சொல் என்பது நம் முன்னோர்கள் கூறிய பழமொழி உங்களை நீங்கள் மேம்படுத்திக்கொள்ளாவேண்டும் என்பதின் வெளிப்பாடுதான் இவை அவ்வாறில்லாமல் அனைத்தையும் நானோ-நீங்களோ மற்றவர்களோ அனைவரிடமும் கூறினால் அது உங்களைத்தான் பாதிக்கும். இதைப் புரிந்து கொள்வீர்கள் என நினைக்கிறேன். எந்த ஒரு செயலாக இருந்தாலும் அது குடும்ப வாழ்வாகட்டும் ஒரு தனிமனிதனாகட்டும் அல்லது ஒரு வியாபாரம் ஆகட்டும். நாம் அன்றாடம் உடுத்தும் உடையாகட்டும் எந்தத் துறையிலும் கூறும் ஒரு சொல் குறைகளை எங்களிடமும், நிறைகளை மற்வர்களிடமும் கூறுங்கள் என்பதுதான்

அடிப்படையில் எந்தச் செயலாகட்டும். எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் தேவைகளைப் பூர்த்தி செய்வது என்பது நல்லதாகாது.
ஒரு வேளை உணவு தயாரிக்க எத்தகைய கவனம் செலுத்தவேண்டியதாக உள்ளது நல்ல தரமான உணவுப் பொருள்களை வாங்கி அதில் உள்ள தூசுகளை அகற்றி நல்ல நீரில் கழுவி நல்ல சுத்தமான பாத்திரத்தில் உணவுப் பொருள் போடப்பட்டு வேகவேண்டிய தன்மைக்கு ஏற்றவாறு தீ எரிய வைத்து அந்த உணவுப் பொருள்

பாத்திரத்தில் பற்றாதவாறு கரண்டி வைத்துப் பக்குவமாக கிளறி நாவிற்கு இனிமை தரும் வகையில் உப்பு, எண்ணெய் தேவையான உணவுப் பொருள் சேர்த்துத் தயாரிக்க வேண்டியதாக உள்ளது இன்னும் சில வகையான உணவுப் பொருள் தயாரிப்பது என்பது ராக்கெட் தயாரிப்பை விட சிரமமாக இருக்கும். ஒரு வேளை உணவுப் பொருள் தயாரிப்பதற்கே இவ்வளவு வேலை என்றால்

**100 ஆண்டுகள் வாழும் ஒரு குழந்தையை உருவாக்குவதென்பது எவ்வளவு கவனம் தேவை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.**

நம் நாட்டில் பலமொழிகள் பல உண்டு. அதில் ஒன்று சாப்பாடு பற்றியது எல்லா நாட்டிலும் பல கலைகளை கற்றுத் தேர்ந்தவர்கள் உண்டு. ஆனால் நம் நாட்டில் சாப்பிடுவதில் மன்னர்கள்தான் அதிகம் இருக்கிறார்கள் என்று மற்ற நாட்டினர்கள் கேலி பேசுவார்கள். இப்போதும் உள்ளார்கள் அவர்கள் நம் நாட்டின் மருத்துவ முறைகளை அறியாமல் அப்படிப் பேசுகின்றார்கள் அது மட்டுமா நம் நாட்டினரும் கூட சிலர் பேசுகின்றார்கள் அவர்கள் அறியாமை ஒரு புறம் என்றால் அந்த அறியாமையை பன்னாட்டினர்கள் பயன்படுத்தி நம்நாட்டில் வியாபாரம் செய்ய உதவியாக உள்ளது

எப்படி என்றால், நம் முன்னோர்கள் உணவு முறைகளை எல்லாம் மருத்துவ குணத்துடன் இணைத்தே அமைத்துள்ளார்கள். இந்த உணவு மனிதனுக்குத் தேவையான சம சீர் முறையில் அமைந்துள்ளது என்பதை யாராலும் மறுக்க இயலாது. இன்றைய நவீன மருத்துவர்கள் பரிந்துரை செய்வதைவிட அதிகமான மருத்துவ குணம் நிறைந்துள்ளவாறு நம் முன்னோர்கள் உணவு முறைகளை அமைத்துள்ளார்கள். அவ்வாறு அமைத்துக் கொடுத்த அந்த உணவு முறையில் நல்ல உடல் தெளிவும் ஆரோக்கியமும் அறிவுத்திறமையும் ஒருங்கிணைந்து இருந்தது. அதனால் எந்தவிதமான இயந்திர உதவி இல்லாமல் அரிய பெரிய செயல்களை செய்து முடித்தார்கள். அரிய பொக்கிஷமான கலைகளின் உதவியுடன் கோவில்கள். அரண்மனைகளை அமைத்தார்கள். அதில் இன்னும் அறிய முடியாததும், ரகசியமானதுமான பல கலைத் திறமைகளைப் பார்த்துப் பார்த்து வியந்துபோகும் அளவுக்குத்தான் இன்றைய நிலையில் நாம் உள்ளோம். அப்படிப்பட்ட அரிய செயல்களையெல்லாம் பார்த்துச்செய்து முடிக்கும் திறமை அன்றைய சம சீரான உணவு முறையிலும் முறையான பயிற்சியாலும் தான் முடிந்தது.

எவ்வாறெனில் ஒரு திருமணம் முடிக்கும்போதே அந்த விழாவிற்கு தகுந்தாற் போல் உணவு முறைகளை வழங்கினார்கள். அது திருமணம் முடிந்து மறுவீடு அழைப்பின் போது உறவுமுறை விருந்து உபசாரங்கள். சம்பந்தி விருந்து என்று பலவகையான உணவு வகைகள் வழங்கினர்கள். அது சத்துள்ள உணவாகவும், அப்படி உண்ணும் உணவு நன்கு ஜீரணமாகக்கூடிய பதார்த்தங்களாகவும் வழங்கினாகள்

மேலும் அவர்கள் மணமக்களுக்கு வரும் உடல் இச்சையில் இணையும் காலத்தை அறிந்து அதற்குத் தக்கவாறான உணவு வகைகளை உண்ணக்கொடுப்பதால் அவர்களின் உடல்நிலை நன்றாக இருக்கும். அந்த நிலையில் உருவாகும் குழந்தை நல்ல நிலையில் வளர்ந்து வாழ்ந்து நல்ல பயனுள்ள வாழ்வை அனுபவிக்கும். இம்மாதிரியான செயல்கள்தான் அன்றைய காலத்தில் நடந்து வந்தது.

அதனால் அன்றைய மனிதர்கள் எந்தவிதமான இயந்திர உதவியில்லாமல் இன்றைக்கு இருக்கிற வசதிகள் இல்லாமல் கூட அறிவுபூர்வமான பல நன்மைகளைச் செய்து முடித்தார்கள். அப்படிப்பட்ட உணவுமுறைகள் மேல்நாட்டு மோகத்தாலும் நாவிற்கு சுவையாக வேண்டும் என்கிற ஆசையாலும் சிறிது சிறிதாக மாறி உடலுக்குத் தீமை விளைவிக்கும் உணவு முறைகள் நடைமுறைக்கு வந்து விட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலைதான் இன்றைய உலகில் உள்ளது. பலவகையான சுவைமிக்க உணவுகள் உண்டு இன்றைய மனிதர்கள் மிகவும் பலவீனமாக உள்ளார்கள். உடலாலும் மனதாலும். அப்படி உள்ள உடல் நிலையில் அடிக்கடி பாதிப்பு ஏற்படுகிறது. அப்படி பாதிப்பு ஏற்படும்போது அதை நிவர்த்தி செய்ய இன்றைய மருத்துவர்கள் சிகிச்சை

செய்து தற்காலிக நிவர்த்தி செய்கிறார்கள். ஆனால் அந்த மருத்துவ சிகிச்சை தற்காலிக நிவர்த்தியாகத்தான் உள்ளது. அது முழுமையாக குணமடைய உதவுவதில்லை. ஏனென்றால் முதலில் நோயாளி தனக்கு விதிக்கப்படும் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. அப்படி இருக்க வேண்டுமானால் அவர் மனது பக்குவப்பட வேண்டும். அந்த நிலையை ஒவ்வொரு மனிதனும் அடைவது அவசியம். அப்படி ஒரு நிலைக்கு தன்னை உட்படுத்த இன்றைய மனிதன் தயாராக இல்லை. ஆனால் அன்றைய காலத்தில் ஒவ்வொரு மனிதரும் உடல் வலிமையும், மனவலிமையும் பெற்றிருந்தார்கள். ஆகவே அன்றைய காலத்தில் எந்த ஒரு இடையூறும் இன்றி பல சாதனைகளைச் செய்ய முடிந்தது. தன் உடல் மனம் இரண்டையும் சுவர் போல் கருதி பாதுகாத்து வைத்திருந்தார்கள். அதனால் சாதனைகளை செய்ய முடிந்தது. இன்றைய மனிதன் உடல் எனும் சுவரை பழுதடைய வைத்துவிட்டு மருத்துவர் எனும் ஓவியனைக் கொண்டு சித்திரம் வரைவதுபோல் தான் செயல்படுகிறார்கள். எத்தனை முறை ஓவியம் வரைந்தாலும் பழுதடைந்த சுவரில் ஓவியம் வரைந்தால் சிதைந்து விடுவதுபோல் தான்.இப்போதுள்ளநிலை அடிப்படையில் உடலில் வலிமையில்லா விட்டால் எத்தனை முறை மருத்துவம் பார்த்தாலும் மீண்டும் மீண்டும் தொடர் சிகிச்சை செய்ய வேண்டியதுதான்.

இப்படிப்பட்ட நிலையை மாற்ற வேண்டுமானால் நாம் அடிப்படையில் சில அன்றாட நடைமுறைகள் கொண்டுவர வேண்டியது அவசியம். நாம் உணவுமுறை, வாழ்வியல் முறை காலத்திற்கு ஏற்றவாறு உணவு முறையினை மாற்றுவது, வாழ்க்கையில் திட்டமிடுதல் (பருவ நிலைக்கு ஏற்ற மாதிரி ஏற்புடைய செயல்களை செயல்படுத்துதல்) உடலையும், மனதையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுதல், இப்படியான அடிப்படை மாற்றங்களையும் இன்னும் சில அடிப்படைத் தன்மைகளையும் உணர்ந்து கொண்டால் போதும், இன்றைக்கு உள்ள நோய்களைக் குறைத்து மருத்துவச் செலவை 70 சதம் இல்லாமல் செய்துவிடலாம். அது மட்டுமா மனித ஆற்றலை இரு மடங்காக உயர்த்தலாம். அதன் மூலம் செலவைக் குறைத்து வரவைப் பெருக்க முடியும். இதனால் அரசு மருத்துவத்துறைக்கு செய்யும் செலவு மிச்சம் ஆகும். ஒவ்வொரு மனிதனும் உடல் வலிமையால், திறமையால் உழைத்து வாழத் தொடங்கி விடுவான். சோம்பேறியாக இருந்து தாய் தந்தைக்கு சுமையாகவும், அரசுக்குத் தொந்தரவு தருவதும் தவிர்க்கப்படும்.

திடமான உடல் இல்லை என்றால் அவன் வீட்டிற்கும், நாட்டிற்கும் உபயோகம் இல்லாத தொல்லையாக மாறுவான் எப்படி என்றால் சோம்பேறியாக உழைக்காமல் இருப்பவனுக்கு நல்ல சிந்தனை மாறி தீய எண்ணங்கள் ஏற்படும். அதனால் தீய செயல்களைச் செய்து மற்றவர்களுக்கும் தொல்லை கொடுத்து இவனும் அழிவான். அப்படிப்பட்டவர்களால்தான் நாட்டில் கள்ளம் களவு ஏமாற்று வேலைகள் எல்லாம் மேற்கொள்ளப்படுகிறது ஒருவகையில் இவர்கள் மனநோயாளிகள் என்பது மிகப் பொருத்தம் மனதில் தன்னம்பிக்கை இழந்தவர்கள் பலர் இந்த மாதிரி தீய வழிகளைப் பின்பற்றுவது வழக்கம். உடல் வலிமையும் மனவலிமையும் உள்ளவர்கள் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் தீய வழிகளில் செல்லாமல் நல்ல வழியில் சென்று கஷ்டங்களைக் கடந்து நம்பிக்கையுடன் செயலாற்றி வெற்றியடைவார்கள்.

இன்னும் சிலர் வெளித்தோற்றத்தில் பார்த்தால் வலிமையாகத் தோன்றுவார்கள். ஆனால் அவர்கள் மிகவும் கோழைகளாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் மனதிற்குள் ஒரு தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு அதை வெளியில் சொல்ல முடியாமல் மனதிற்குள் வைத்து வாழ்வார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களை ஒரு வீரனாக காட்டிக்கொள்வதும் வீறாப்பாக பேசிக்கொள்வதும், சிலர் போதை தரும் பொருள்களை உட்கொண்டு பிதற்றுவதும் உண்டு. இன்னும் சில ஆண்கள் தன் மனைவியை மிரட்டுவதற்கு இந்த மாதிரி செயல்களில் ஈடுபடுவதும் உண்டு. இன்னும் பலவகையில் இதே செயல்கள் வெளிப்படுகிறது. இந்த மாதிரியான செயல்களை

எல்லாம் செய்பவர்கள் ஏதாவது ஒருவகையில் தன்னம்பிக்கை இழந்தவர்களாகத்தான் இருப்பார்கள். அப்படி ஏற்படாதவாறு மனிதனை தன்னம்பிக்கை உள்ளவனாக மாற்றிவிட்டால் தீமைகள் குறைந்துவிடும். அப்படிப்பட்ட ஒரு எதிர்காலச் சந்ததிகளை ஏற்படுத்தும் முதல் அத்தியாயத்தை உங்களிடம்தான் தொடங்க வேண்டி உள்ளது. அந்தத் தொடக்கத்தை நீங்கள் தொடங்குங்கள்

சுபம்